செ.வெ.எண்:08/ஜனவரி நாள்:05.01.2016

# செய்திக்குறிப்பு

**இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, சேலம்** அவர்களால் அறிவிக்கப்பட்ட **உதவி பட்டு வளர்ச்சி ஆய்வாளர்** பணிக்காலியிடத்திற்கு சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்ககத்தால் மாநில பதிவு மூப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பதிவு மூப்பு மற்றும் தகுதியுடைய பதிவுதாரர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட உள்ளனர்.

**கல்வித்தகுதி :** **1. பி.எஸ்.சி பட்டப்படிப்பு (தாவரவியல் (அல்லது) விலங்கியல் (அல்லது) வேதியியல் ஆகிய பாடத்தில் ஏதாவது ஒன்றை முதன்மை பாடமாக எடுத்து) தேர்ச்சி சான்று பெற்று பதிவு செய்திருக்க வேண்டும்.**

**மற்றும்**

**2. (அ) பட்டுப்புழு வளர்ப்பில் குறைந்தது 6 மாத முன்அனுபவச் சான்றிதழை பதிவுசெய்திருக்க வேண்டும்.**

**(அல்லது)**

**(ஆ) ஒசூர் பட்டு வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 6 மாத கால பயிற்சி பெற்ற சான்றிதழை பதிவு செய்திருக்க வேண்டும்.**

**(அல்லது)**

**(இ) தமிழ்நாடு விவசாய பல்கலைகழகத்தில் பட்டு வளர்ச்சி பாடப்பிரிவில் முதுநிலை பட்டய பட்டுவளர்ச்சி பாடப்பிரிவில் சான்றிதழ் பெற்று பதிவு செய்திருக்க வேண்டும்.**

**வயதுவரம்பு :** 01.07.2015 அன்று
அனைத்துப் பிரிவினருக்கும் 18 முதல் 57 வரை
பொதுப் பிரிவினர் 18 முதல் 30 வரை

மேற்கண்ட தகுதிகள் உடைய பதிவுதாரர்கள் **உதவி பட்டு வளர்ச்சி ஆய்வாளர்** பணிக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளதால் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தங்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டை மற்றும் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் **உடன்** நேரில் வருகை புரிந்து பரிந்துரைக்கப்படவுள்ள பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதா? என்பதனை உறுதி செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**